//தேர்வுகள் அவசரம்//

சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் சென்னை 08

ந.க.எண் 9337/அ5/2023 நாள் 06.05.2024

பொருள் பள்ளிக்கல்வி - சென்னை மாவட்டம் - மார்ச் / ஏப்ரல் 2023 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகள் மதிப்பெண் பட்டியல் பதிவிறக்கம், மற்றும் மறுகூட்டல் / விடைத்தாள் நகல் விண்ணப்பித்தல் அனைத்து பள்ளிகளுக்கு அனுப்புதல் - சார்ந்து

பார்வை சென்னை - 06, அரசுத்தேர்வுகள் இயக்ககத்தின் செய்தி குறிப்பு நாள் 06.05.2024

மார்ச் / ஏப்ரல் 2024 மேல்நிலை இரண்டாம் ஆண்டு அரசுத்தேர்வுகள் இயக்கத்தின் செய்தி குறிப்பு அனைத்து வகைப்பள்ளிகளுக்கு அனுப்பப்படுகிறது.

<u>**மதிப்பெண் பட்டியல் பதிவிறக்கம் செய்தல்**</u>

09.05.2024 முதல் மார்ச் 2024 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வெழுதிய பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளி தலைமையாசிரியர்கள் வழியாக மதிப்பெண் பட்டியலை ( Statement of Marks) பெற்றுக்கொள்ளலாம் அல்லது https://dge.tn.gov.in/ என்ற இணையதளத்தில் Notification பகுதியில் சென்று HSEII Year March 2004 Provisional Certificate பக்கத்தில் தங்களது பிறந்த தேதி பதிவெண் ஆகிய விவரங்களை அளித்து தாங்களே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தனித்தேர்வர்கள் https://dge.tn.gov.in/ என்ற இணையதளத்தில் Notification பகுதியில் சென்று HSEII Year March 2004 Provisional Certificate பக்கத்தில் தங்களது பிறந்த தேதி பதிவெண் ஆகிய விவரங்களை அளித்து தாங்களே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என அரசுத்தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது

<u>**பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வர்கள் விடைத்தாள்கள் நகல் / மறுகூட்டல் I விண்ணப்பிக்கும் முறை**</u>

விடைத்தாள் நகல் / மறுகூட்டல் - I கோரி விண்ணப்பிக்க விரும்பும் பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகள் வழியாகவும் , தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் வழியாகவும் 07.05.2024 ( **செவ்வாய்க்கிழமை) காலை 11 மணி முதல் 11.05.2024 (சனிக்கிழமை) மாலை 5.00 மணி** வரை விண்ணப்பிக்கலாம்.

விடைத்தாள் நகல் , மறுகூட்டல் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றிற்கு மட்டுமே தேர்வர்கள் விண்ணப்பிக்க இயலும். தேர்வர்கள் தங்களது விடைத்தாள்களின் நகல்

Scanned with OKEN Scanner

வேண்டுமா ? அல்லது மதிப்பெண் மறுகூட்டல் செய்ய வேண்டுமா? என்பது குறித்து தெளிவான முடிவு செய்து கொண்டு அதன் பின்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விடைத்தாள் நகல் பெற்றவர்கள் மட்டுமே விடைத்தாள் மறுமதிப்பீடு கோரி பின்னர் விண்ணப்பிக்க இயலும்.

மதிப்பெண் மறுகூட்டல் கோரி விண்ணப்பிக்கும் பாடத்திற்கு விடைத்தாள்களின் நகல் கோரி விண்ணப்பித்திட இயலாது. விடைத்தாள்களின் நகல் பெற்ற பிறகு, அவர்கள் மறுகூட்டல் / மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு அளிக்கப்படும் என அரசுத்தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மேல்நிலை இரண்டாம் ஆண்டு | மதிப்பெண் பட்டியல்கள் பதிவிறக்கம் செய்யும் நாட்கள் | 09.05.2024 முதல் | https://dge.tn.gov.in/ |
| | விடைத்தாள் நகல் / மறுகூட்டல் I ற்கு விண்ணப்பிக்கும் நாட்கள் | 07.05.2024 முதல் 11.05.2024 வரை | பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகள் / தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் |

**விடைத்தாளின் நகல் (Copy of the answer script) பெறுவதற்கான கட்டணம்**

ஒவ்வொரு பாடத்திற்கும் - ரூ 275/-

**மறுகூட்டல் I ற்கு (Re-totalling I) கட்டணம்**

| | |
|---|---|
| உயிரியல் பாடத்திற்கு மட்டும் | ரூ. 305/- |
| ஏனையபாடங்கள் ( ஒவ்வொன்றிற்கும் ) | ரூ. 205/- |

**பணம் செலுத்தும் முறை**

தேர்வர்கள் விடைத்தாள்களின் நகலிற்கான கட்டணத்தை விண்ணப்பிக்கவுள்ள பள்ளியிலேயே பணமாகச் செலுத்த வேண்டும்

**விடைத்தாள் நகல் . இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளும் முறை**

விடைத்தாள் நகல் விண்ணப்பிக்கும் போது வழங்கப்படும் ஒப்புகைச் சீட்டினை மாணவர்கள் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும் . ஒப்புகைச்சீட்டில்

Scanned with OKEN Scanner

குறிப்பிட்டுள்ள விண்ணப்ப எண்ணைப் பயன்படுத்தியே தேர்வர்கள் தங்களது விடைத்தாளின் நகலினை இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்

விடைத்தாளின் நகலினை இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டிய நாள் மற்றும் இணையதள முகவரி பின்னர் ஊடகங்கள் வாயிலாகவும் https://dge.tn.gov.in/ என்ற இணையதளத்திலும் வெளியிடப்படும் எனவும் அரசுத்தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது.

எனவே அனைத்து வகைப்பள்ளித்தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளியில் பயின்ற மாணவர்களுக்கு மற்றும் வகுப்பு ஆசிரியர்களுக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

6.5.24

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

அனைத்து வகை பள்ளிகளின் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் சென்னை மாவட்டம்

நகல்

அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் சென்னை மாவட்டம் தகவலுக்காகவும் தக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அனுப்பப்படுகிறது.

Scanned with OKEN Scanner